# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.139 of 2025
Prosecution Witness No.P.W. 10(L.W.11)

| | |
|---|---|
| Name | Thiru.Ulaganathan |
| Father/Husband Name | Sanyasi |
| Calling/Occupation | Inspector of Police |
| Age | 53 |
| Address | Town Police Station, Tirupattur |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 19.06.2026.

(A1 and A2 Present)

**முதல் விசாரணை**

நான் தற்போது ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு நகர காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். கடந்த 21.10.2017 அன்று நான் வேப்பங்குப்பம் காவல் நிலைய குற்ற எண்.410/2017 வழக்கினை விசாரணைக்கு எடுத்து கொண்டு சம்பவ இடம் சென்று பார்வையிட்டேன். உதவி ஆய்வாளர் தயார்செய்த பார்வை மகசர் மற்றும் வரைபடம் சரியாக இருந்ததால் நான் தனியாக தயார் செய்யவில்லை. உதவி ஆய்வாளர் விசாரித்த சாட்சிகள் அவரிடம் சொன்னதுபோலவே என்னிடடும் சொன்னதால் நான் தனியாக

வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. சாட்சி சின்னசாமி, சின்னக்கா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர ராஜேந்திர பிரசாத் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். DDP அவர்களின் கருத்துரை பெற்று U/s.294(b), 307 of IPC, Sec 25(1)(a) of Arms Act @ U/s.294(b), 307 of IPC, Sec 25(1)(a), 5, 39 of Arms Act படி பிரிவு மாற்று அறிக்கை தயார் செய்து அத்துடன் என் விசாரணை முடித்து குற்ற பத்திரிக்கை மேற்கண்ட சட்ட பிரிவுகள் கீழ் தாக்கல் செய்தேன். **பிரிவு மாற்று அறிக்கை அ.த.சா.ஆ. 14** ஆகும்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

மேற்படி எதிரி வசிக்கும் இடம் மலை கிராமம் என்றால் சரிதான். அப்படி எனில் அங்கு காட்டு விலங்குகள் அதிகமாக ஊருக்குள் நுழைய வாய்ப்புள்ளது என்றால் சரிதான். அதனால் அங்கு வசிக்கும் மக்கள் அரசாங்கத்திடம் உரிமம் பெறாமல் சட்ட விரோதமாக நாட்டு துப்பாக்கி போன்ற ஆயுதங்கள் வைத்திருப்பார்கள் என்றால் வைத்திருப்பார்கள். தெரிந்தால் நடவடிக்கை எடுப்போம். எதிரியிடமிருந்து துப்பாக்கி கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி எதிரிகளுக்கு எதிராக அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

ELAVARASAN

Digitally signed by ELAVARASAN
Date: 2026.06.19 17:34:02 +0530